**OS.No.213/2011**

**நாள்:07.12.2021**

**வா.சா.1, ராஜசேகரி,**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தகப்பனார் இறந்த பிறகு எனக்கும், எனது சகோதரிகள் பெயர் பட்டாவில் வந்தததா என்றால் பட்டாவில் பெயர் இருந்தது. 1ம் பிரதிவாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண்.25807/18 தாக்கல் செய்து அதில் எனது தந்தை கோவிந்தசாமி, காசியம்மாள், ராஜசேகரி, சென்னம்மாள் ஆகியோர்களுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் பத்திரம் சட்டவிரோதமானது என்றும், அரசுக்கு சொந்தமான நிலத்தை அரசின் அனுமதி இல்லாமல் நாங்களே தானசெட்டில்மென்ட் செய்துக்கொண்டது செல்லாது என்றும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த ரிட்மனு உத்தரவின் பேரில் ஏற்கனவே பட்டாதாராக இருந்த காசியம்மாள், ராஜசேகரி, சென்னம்மாள் ஆகிய பெயர்களை பட்டாவில் இருந்து நீக்கினார்கள் என்று சொன்னால் இல்லை. பட்டாவை நீக்கும் போது எனது அப்பா பெயரை மட்டும் விட்டுவிட்டார்கள் என்றால் இல்லை. எனது அப்பா மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வெற்றி பெற்றுவிட்டார். மேற்படி விவரத்தை நான் என்னுடைய வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. பட்டா எண்.959 என்றால் சரிதான். வட்டாட்சியர் எங்களை நீக்கி சுமார் 10வருடம் ஆகிறது என்றும், இதுவரை இணைக்கச்சொல்லி எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பட்டாவை வாங்கும் போது இந்த நிலம் ஆதியில் புறம்போக்கு நிலமாக இருந்தது என்றால் எனது தந்தை சம்பாதித்து எங்களது பெயருக்கு தானசெட்டில்மென்ட் எழுதினார். தானசெட்டில்மென்ட் எழுதியது சட்டவிரோதம் என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், உத்தரவு பிறப்பித்தது என்றால் இல்லை. தாவசொத்தில் SC.எண்.995 1ம் பிரதிவாதியின் உள்ளது என்றால் இல்லை. கோவிந்தசாமியின் பெயரில் உள்ளது. வீட்டு மின் இணைப்பு எண்.758ம் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் இல்லை. கோவிந்தசாமியின் பெயரில் உள்ளது. தாவா சொத்தில் 2சி புளியமரம் உள்ளது என்றால் எல்லா மரமும் உள்ளது. 2சி தீர்வை 1ம் பிரதிவாதி தான் செலுத்தி வருகிறார் என்றால் இல்லை. தாவா சொத்து முழுவதும் எங்களுக்கு தான் உரிமை என்றும், பிரதிவாதிகளுக்கு இல்லை எனக் கூறுகிறேன். 25.06.1987 தேதியில் எனது தந்தைக்கு வட்டாட்சியரால் கொடுக்கப்பட்ட 1392 பசலியில் எனது தந்தைக்கு எந்தவித சுவாதீனமும் இல்லை என்று சொன்னால் எங்களுக்கு எப்படி பட்டா கொடுத்தார்கள். 01.08.2011 தேதியில் தான் எனது அப்பா தானசெட்டில்மென்ட் எழுதினார் என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக இரண்டு பேருக்கும் கூட்டுபட்டா உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்தில் இரண்டு ஆழ்துளை கிணறு உள்ளது என்றும், 800அடி ஆழம் ஒன்றும், 600அடி ஆழமும் பிரதிவாதிகள் போட்டது என்றால் இல்லை. எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்று நான் ஆவணம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நானோ, எனது குடும்பத்தாரோ தாவா

சொத்தில் சுவாதீன அனுபவம் இருந்ததற்கு எந்தவித ஆவணமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. சின்னராஜ் மனைவி குட்டச்சி. குட்டச்சி *1393*, *1397*, *1398*, *1400*, *1402* பசலிகளில் 2ஏ சார்ஜ் தண்டத்தீர்வை செலுத்தியுள்ளார் என்றால் இல்லை. தாவா சொத்திற்கு நேரடியாக 1ம் பிரதிவாதி *12.03.1986*, *12.02.1988*, *29.09.1989*, *1402*ம் பசலி ஆகியவைகளில் தாவா சொத்திற்கு 2ஏ சார்ஜ் செலுத்தியுள்ளார் என்றால் இல்லை. மோசடி பட்டா. 1ம் பிரதிவாதி பட்டா எண்.959 மற்றும் 205 ஆகியவைகளுக்கு *13.01.2015*, *03.02.2016*, *03.01.2018*, *28.01.2020*, *28.01.1984*, *15,05.1986*, *21.01.1995*, *21.01.2000*, *08.01.2001*, *13.02.2005*, *06.02.2007*, *17.03.2006*, *12.01.2008*, *05.01.2009*, *11.01.2010*, *07.07.2011*, *03.02.2016*, *03.01.2018*, *28.01.2020* ஆகிய தேதிகளில் பட்டா மாறிய பிறகு கந்தாயம் செலுத்தியுள்ளார் என்றால் அதெல்லாம் பொய். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், உத்தரவுப்படி எனது அப்பாவிற்கு பாத்தியம் இல்லாமல் சட்டவிரோதமாக பட்டாவில் பெயரை நுழைத்துள்ளார் என்றால் சரியல்ல. ஆதியில் தாவா சொத்து தரிசு புறம்போக்காக இருந்தது என்றால் இல்லை. பட்டா. மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவு ந.க.எண்.*36021*/அ.2 *18.01.1984* தேதிய உத்தரவுப்படி இலவச நிலப்பட்டா வெங்கட்டன் பெயருக்கு கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. பட்டா வழங்குவதற்கு முன்பே வெங்கட்டன் இறந்துவிட்டதால் அதனால் மறுபடியும் மாவட்ட ஆட்சியரால் ந.க.எண்.*24665*/பி4. *18.01.1994* தேதிய உத்தரவுப்படி அவர்களின் மகன்களான சின்னராஜி மற்றும் எனது தந்தை கோவிந்தசாமிக்கு கூட்டுப்பட்டா கொடுத்தார்கள் என்றால் இல்லை. *03.10.2011*ல் எனது தந்தை இறந்ததினால் அவரின் வாரிசுகளாக RTR.*1086*/*11*ன்படி ராஜசேகரி, காசியம்மாள், சென்னம்மாள் ஆகியோரின் பெயர் பட்டா எண்.959ல் இணைக்கப்பட்டது என்றால் எனக்கு படிக்கத்தெரியாது. தகவல் அறியும் சட்டத்தின் படி பெற்ற தகவலின் படி கிராம நிர்வாக அலுவலர் சின்னராஜ், பெருமாள் மட்டும் தான் தாவா சொத்தில் வீடு கட்டி முழுவதும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், நான் வெளியூரில் குடியிருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் உண்மை இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டவிரோதமானது, அக்கிரம லாபம் அடையக்கூடியது தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.